




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 235 17.2.2026 TUESDAY MAASI : 5 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 235 17.2.2026 செவ்வாய்கிழமை மாசி : 5 விலை : ரூ.5/–


## "உயர்கல்வித்துறை சார்பில் ரூ.542.02 கோடியில்

# "புதிதாக 15 கட்டடங்கள் திறப்பு!"




■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலில் சிவராத்திரியை முன்னிட்டு சேவா பாரதி தென் தமிழ்நாடு நடத்திய 18 சிவலிங்க பூஜையின் போது எடுத்த படம்.



## ஆத்தூர் தொகுதியில் திமுகவை வளர்த்த ஊராட்சிகளில் புதுச்சத்திரம் ஒன்று: அமைச்சர் ஐ.பெரியசாமி புகழாரம்!

சின்னாளபட்டி. பிப். 16

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட புதுச்சத்திரம் ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மக்கள் நலனில் 'தாயுமானவர்' முதலமைச்சர் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட காமாட்சிபுரம், பலக்கனூத்து மற்றும் புதுச்சத்திரம் ஆகிய ஊராட்சிகளில் ரூ.77.74 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட திட்டப்பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து அமைச்சர் பேசியதாவது:

மகளிர் உரிமைத் தொகை: தமிழக முதலமைச்சர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் தற்போது வரை 1.16 கோடிக்கும் அதிகமான பெண்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வருகிறார். விடுபட்டவர்களுக்கும் விரைவில் இத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். உயர்த்தப்படும் உதவித்தொகை: இனி வரும் காலங்களில் மகளிர் உரிமைத் தொகை ரூ.1,000லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

நிதியுதவி: கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் பொங்கல் பரிசு மற்றும் உரிமைத் தொகை என ஒரு குடும்பத்திற்கு ரூ.9,000 வரை அரசு வழங்கியுள்ளது. தமிழக மக்களைக் காக்கும் 'தாயுமானவராக' முதலமைச்சர் திகழ்கிறார்.

புதுச்சத்திரம் கிராமத்திற்கு புதிய திட்டங்கள் நிகழ்ச்சியின் போது புதுச்சத்திரம் கிராம மக்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று, அமைச்சர் உடனடியாக கீழ்க்கண்ட பணிகளுக்கு உத்தரவிட்டார்: புதிய பயணிகள் நிழற்குடை, நாடக மேடை, பேவர்பிளாக் கற்கள் பதித்த சாலை. அமைச்சரின் இந்த உடனடி நடவடிக்கைக்கு கிராம மக்கள் தங்களது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி. மணி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராகவ் பாலாஜி, திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர், சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், ரெட்டியார்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவன், கண்ணன், பொது விநியோகத்; திட்ட துணைப் பதிவாளர் கார்த்திகேயன். கூட்டுறவு சார்பதிவாளர்கள் அன்பரசு, மணிகண்டன், வட்ட வழங்கல் அலுவலர் மகேஷ், மாவட்ட தகவல் தொழில் நுட்;ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் சுந்தரி அன்பரசு, புதுச்சத்திரம் மெர்சி (எ) லெட்சுமி, ராதாதேவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி, மலைச்சாமி, நாகலெட்சுமி ரமேஸ், சுமதி கணேசன், விவேகானந்தன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஸ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், போலியமனூர் திமுக கிளைச் செயலாளர் ராஜ்குமார் உட்பட திமுக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000


சென்னை, பிப்.17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 542.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், பணிமனை கட்டடங்கள், மகளிர் விடுதிக் கட்டடம், திறன்மிகு மையங்கள் போன்ற பல்வேறு கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார்.

மேலும், 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல்;

அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் இடஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.




திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் ஒரு புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி; இராணிப்பேட்டை மாவட்டம் மேல்வெங்கடாபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - திருக்கோவிலூர், சென்னை மாவட்டம் - திருவொற்றியூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 42 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்கள்;

தருமபுரி மாவட்டம் செட்டிக்கரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துவாக்குடி, சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, தேனி மாவட்டம் - வீரபாண்டி, மதுரை மாவட்டம் - செக்கானூரணி, கோயம்புத்தூர் மாவட்டம் - தொண்டாமுத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் - தென்னாங்கூர், செங்கல்பட்டு மாவட்டம் - பெரும்பாக்கம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கல்லூரிகளில் 45 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 34 வகுப்பறைகள் 19 ஆய்வகங்கள், பணிமனை, மகளிர் விடுதி மற்றும் இதர கட்டடங்கள்;

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஐந்து அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் 255 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 திறன்மிகு மையங்கள்;

அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக, 198.84 கோடி ரூபாய் செலவில் கற்றல் மேலாண்மை அமைப்புடன் ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருள்;

என மொத்தம் 542.02 கோடி ரூபாய் செலவிலான உயர்கல்வித்துறை சார்ந்த 15 கட்டடங்களை திறந்து வைத்து, ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருளை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், ஈரோடு மாவட்டம் - அந்தியூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் - உளுந்தூர்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் நத்தம், திருவாரூர் மாவட்டம் - கூத்தாநல்லூர், பெரம்பலூர் மாவட்டம் - கொளக்காநத்தம், தஞ்சாவூர் மாவட்டம் - திருவிடைமருதூர், சிவகங்கை மாவட்டம் - மானாமதுரை, கடலூர் மாவட்டம் - பண்ருட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 180 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, செங்கிபட்டி, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, கடலூர் மாவட்டம் - சிதம்பரம், திட்டக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம், ஈரோடு மாவட்டம் - திட்டமலை, ஈரோடு, தூத்துக்குடி மாவட்டம் - கோவில்பட்டி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவில், கன்னியாகுமரி, தென்காசி மாவட்டம் - கடையநல்லூர், விருதுநகர் மாவட்டம் - சிவகாசி, திண்டுக்கல் மாவட்டம் - நிலக்கோட்டை, சென்னை - நந்தனம், மாநிலக் கல்லூரி, தரமணி, இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடி, நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம், செங்கல்பட்டு மாவட்டம் - பெரும்பாக்கம், குரோம்பேட்டை;

நாமக்கல் மாவட்டம் - இராசிபுரம், நாமக்கல், தர்மபுரி மாவட்டம் - அரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - லால்குடி, சேதுராபட்டி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி, தேனி மாவட்டம் - போடிநாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - பர்கூர், திருப்பத்தூர் மாவட்டம் - ஜோலார்பேட்டை, அரியலூர் மாவட்டம் - கீழப்பழுவூர், அரியலூர், மயிலாடுதுறை - சேலம் கரூர் வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு கல்லூரிகளில் 375 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 437 வகுப்பறைகள், 19 பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்கள்;

என மொத்தம் 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உயர்கல்வித்துறை கட்டடங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வேளாண்மை - உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயர்கல்வித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1210.52 கோடி ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்து, 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 43 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புக்கூட்டு மையங்களுக்கான மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

## "மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" : விஜய்

சென்னை: பிப்.17-

"மீனவர்கள் பிரச்சினையில் தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா?" என தவெக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "புதுச்சேரியின் காரைக்கால் மாவட்டம், காசாக்குடிமேடு, கிளிஞ்சல்மேடு கிராமங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது. அத்துடன், அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.



இந்த அடாத செயல், அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் 25 பேரையும் உடனடியாக விடுவித்து, அவர்களது படகுகளையும் மீட்டுத் தர ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில், இலங்கை நீதிமன்றத்தால் கடந்த 3ம் தேதி விடுவிக்கப்பட்ட பிறகும் தமிழ்நாட்டு மீனவர்கள் 9 பேர், சொந்த ஊருக்குத் திரும்ப முடியவில்லை. அவர்கள் அங்கே பரிதவித்து வருவதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளது வேதனை அளிக்கிறது. மேலும் தமிழக மீனவர்கள் 3 பேர், இலங்கை நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையைச் செலுத்த முடியாமல் சிறையில் வாடுகின்றனர்.

மீனவர்களுக்குத் தொடர்ந்து இதுபோல நிகழ்வதைத் தடுக்க, தமிழக அரசு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாம் கடிதம் எழுதுவதே போதும் என்று தமிழக முதல்வர் எண்ணுகிறாரா? இது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவர்கள் அனைவரையும் உரிய முறையில் மீட்டு, சொந்த ஊருக்கு அழைத்து வர வேண்டும்.

மனிதாபிமான முறையில் இலங்கை அரசிடம் பேசி, தாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள், ஒன்றிய அரசை உண்மையாகவே உணர்வுப்பூர்வமாக வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று விஜய் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் பிப்ரவரி இறுதிக்குள் புதிதாக 245 மின்சார பேருந்துகள் இயக்கப்படும்: அதிகாரிகள் தகவல்

சென்னை, பிப்.17-

இம்மாத இறுதிக்குள் சென்னையில் மேலும் 245 மின்சார பேருந்துகள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என மாநகர் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க, டீசல் பேருந்துகளுக்கு பதிலாக மின்சார பேருந்துகளைப் பயன்படுத்த தமிழக அரசு முடிவு செய்தது. அதன்படி, கடந்த ஜூன் மாதம் சென்னையில் 120 மின்சாரப் பேருந்துகளின் சேவை தொடங்கப்பட்டது.

வியாசர்பாடி பணிமனையில் இருந்து தொடங்கப்பட்ட இந்த பேருந்து சேவை, தொடர்ந்து பெரும்பாக்கம், பூந்தமல்லி ஆகிய பணிமனைகளில் இருந்தும் இயக்கப்பட்டு வருகின்றன.

625 மின்சார பேருந்துகளை வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில், தற்போது வரை 380 மின்சார பேருந்துகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மேலும், 245 பேருந்துகளை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவர மாநகர் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து மாநகர் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியதாவது: பல்லவன் இல்லம் மத்திய பணிமனையில் மின்சார பேருந்துகளுக்கான பணிமனை கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. 245 மின்சார பேருந்துகள் தயாரிப்பு பணிகள் முடிந்துள்ளன, விரைவில் சோதனை ஓட்டம் நடத்தப்படும்.

பிப்ரவரி இறுதிக்குள் இவை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இதில் 145 பேருந்துகள் பல்லவன் இல்லம் பணிமனையுடனும் 100 பேருந்துகள் தண்டையார்பேட்டை பணிமனையுடனும் இணைக்கப்படும். 2வது கட்டமாக மேலும் 600 மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையில் மாநகர் போக்குவரத்துக் கழகம் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்.

## சோழிங்கநல்லூர் எல்காட் நிறுவனத்தில் ரூ.84 கோடியில் புதிய தகவல் தொழில்நுட்ப கட்டிடம் திறப்பு

சென்னை, பிப்.17-

சோழிங்கநல்லூர் எல்காட் நிறுவனத்தில் ரூ.84.42 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டிடத்தை முதல்வர் ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.




தமிழகம் முழுவதும் உலகத்தரம் வாய்ந்த புதிய தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குதல், தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (‘எல்காட்’) மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஓசூரில் சிறப்பு பொருளாதார மண்டலங்களை எல்காட் நிறுவியுள்ளது.

3 ஆயிரம் பேருக்கு வேலை: இந்நிலையில், சென்னை சோழிங்கநல்லூர் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 2.33 லட்சம் சதுரஅடி பரப்பளவில் ரூ.84.42 கோடி செலவில் 11 தளங்களுடன் எல்காட் தகவல் தொழில்நுட்ப கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை, தலைமைச் செயலகத்தில் இருந்து முதல்வர் ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழக தகவல் தொழில்நுட்பவியல், டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் ஒருங்கிணைந்த கட்டிட மேலாண்மை அமைப்பு, 24 மணிநேர பாதுகாப்பு வசதி, பசுமை மின்சக்தி பயன்பாடு, நீர் மேலாண்மை கட்டமைப்பு என பல வசதிகளுடன் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பயன்பாட்டுக்கு ஏற்ப இந்த கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 3 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், தகவல் தொழில்நுட்பத் துறை செயலர் பிரஜேந்திர நவ்நீத், எல்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கா.ப.கார்த்திகேயன், நிர்வாக இயக்குநர் வெ.தீபனா விஸ்வேஸ்வரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சென்னையில் மின்சார ரயில் சேவையில் மாற்றம்

சென்னை, பிப்.17-

சென்னை சென்ட்ரல் சூலூர் மார்க்கத்தில் சூலூர்பேட்டை யார்டில் பொறியியல் பணி காரணமாக, புறநகர் மின்சார ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



இதன்படி, சென்னை சென்ட்ரல் சூலூர்பேட்டைக்கு வரும் 19, 21 ஆகிய தேதிகளில் நண்பகல் 12.10 மணிக்கு புறப்படும் மின்சார ரயில், எளாவூர்சூலூர்பேட்டை இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

சூலூர்பேட்டை சென்னை சென்ட்ரலுக்கு மேற்கண்ட நாட்களில் மதியம் 1.15 மணிக்கு புறப்பட வேண்டிய மின்சார ரயில், சூலூர்பேட்டை எளாவூர் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

தாம்பரம் மெமு ரயில் சென்னை எழும்பூர் விழுப்புரம் மார்க்கத்தில், மைலம் திண்டிவனம் இடையே பொறியியல் பணி காரணமாக, தாம்பரம் விழுப்புரம் மெமு பயணிகள் ரயில் சேவையில் மாற்றம் செய்யப்படுகிறது.

அதன்படி, தாம்பரம் விழுப்புரத்துக்கு வரும் 17, 19, 21 ஆகிய தேதிகளில் காலை 9.40 மணிக்கு புறப்படும் மெமு பயணிகள் ரயில், திண்டிவனம் விழுப்புரம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

விழுப்புரம் சென்னை கடற்கரைக்கு மேற்கண்ட நாட்களில் மதியம் 1.30 மணிக்கு புறப்படும் மெமு பயணிகள் ரயில், விழுப்புரம் திண்டிவனம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைக்காடு கப்பல் கட்டும் திட்டத்தை ரத்து செய்ய பிரேமலதா வலியுறுத்தல்

சென்னை, பிப்.17-

முல்லைக்காடு கப்பல் கட்டும் திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “முல்லைக்காடு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அமையவுள்ள கப்பல் கட்டும் தளம், ஆயிரக்கணக்கான உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் சிறு உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும்.

பல தலைமுறைகளாகப் பாரம்பரியமாக நடைபெற்று வரும் உப்பு உற்பத்தித் தொழில், இத்திட்டத்தால் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பாரம்பரியத் தொழிலையும், தொழிலாளர் உரிமைகளையும் காப்பது அரசின் கடமையாகும்.

எனவே, இத்திட்டத்தை ரத்து செய்வதோடு, அப்பகுதி மக்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் கருத்துகளைக் கேட்டறியும் ஜனநாயக முறையை அரசு பின்பற்ற வேண்டும். ஏற்கெனவே, விலை வீழ்ச்சியால் தவிக்கும் பல லட்சம் உப்பு உற்பத்தி குடும்பங்களின் நலன் கருதி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

## “உரிமைத் தொகைத் திட்டத்தால் மகளிர் மகிழ்ச்சி; முடக்க நினைத்தவர்களுக்கு அதிர்ச்சி!” உதயநிதி ஸ்டாலின்

திருச்சி, பிப்.17-

“மகளிர் உரிமைத் தொகையாக ரூ.5,000 பெற்ற பெண்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முடக்க நினைத்தவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்,” என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




திருச்சி மாவட்டம், லால்குடி நகராட்சியில் ரூ.31.89 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் ரூ.4.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்து பேசியதாவது: லால்குடி நகரத்தில் புதிய பேருந்து நிலையம், நகராட்சி அலுவலகம் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். திருச்சி மாவட்டத்தில் திருச்சி மாநகராட்சிக்கு அடுத்தப்படியாக வேகமாக வளர்ந்து வரும் ஊர் லால்குடி தான்.

தமிழுக்காக தலைவர் கலைஞர் ரயில் தண்டவாளத்தில் தலைவைத்து படுத்த கல்லக்குடி இருப்பது லால்குடி பகுதி என்பதில் பெருமை கொள்கிறேன். திமுக ஆட்சிக்கு 3 அமைச்சர்களை தந்த ஊர் லால்குடி. தலைவர் கலைஞருக்கு நெருக்கமானவர் அன்பில் தர்மலிங்கம், முதல்வர் ஸ்டாலினுக்கு நெருக்கமான அமைச்சர் கே.என்.நேரு, எனக்கு பக்கபலமாக இருக்கும் அன்பில் மகேஸ் ஆகியோர் லால்குடியைச் சேர்ந்தவர்கள்.

இன்று நகராட்சி நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை ஆகிய 2 முக்கிய துறைகளுக்கு அமைச்சர்கள் தந்தது லால்குடி தான். அவர்கள் இருவரும் திருச்சி மாவட்ட வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் முதல்வரிடம் கேட்டுப் பெறுகின்றனர்.

அதேபோல எம்எல்ஏ சவுந்தரபாண்டியனும் இந்தப்பகுதிக்காக பாடுபடுகிறார். திருச்சி பஞ்சப்பூரில் மிகப்பெரிய பேருந்து முனையம் கட்டிய நேரு அவரது சொந்த ஊரில் பேருந்து கட்டாமல் விடுவாரா? முதல்வரிடம் தெரிவித்து பேருந்து நிலையம் மட்டுமின்றி நகராட்சி அலுவலகமும் கொண்டு வந்துள்ளார்.

லால்குடி மட்டுமல்ல தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் முதல்வர் பல்வேறு திட்டங்களை நடைமுப்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1.31 கோடி மகளிருக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வந்தார். இந்தத்திட்டத்தை தேர்தலுக்குள் எப்படியாவது நிறுத்தி விட வேண்டும் என சிலர் சூழ்ச்சி செய்தனர். ஆனால் முதல்வர் ஸ்டாலின், என் மகளிருக்கு நான் கொடுத்த ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால் நான் ரூ.5,000 தருவேன்' என்று, பிப்., மார்ச், ஏப்ரல் ஆகிய 3 மாதங்கள் சேர்த்து ரூ.3,000 கோடை கால சிறப்புத் தொகையாக ரூ.2,000 என ரூ.5,000 வழங்கி உள்ளார்.

மீண்டும் திமுக ஆட்சி அமைந்ததும் மகளிருக்கான உரிமைத் தொகை ரூ.2,000 உயர்த்தி தருவேன் என முதல்வர் வாக்குறுதி அளித்துள்ளார். முதல்வர் அளித்த வாக்குறுதியை செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கை உங்களிடம் உள்ளது. இன்று தமிழ்நாடு மக்கள் குறிப்பாக மகளிர் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர்.

இந்தத்திட்டத்தை முடக்க நினைத்தவர்கள் அதிர்ச்சியில் உள்ளனர். இந்த திட்டங்கள் மட்டுமின்றி லால்குடிக்கு ரூ.250 கோடியில் லால்குடி புள்ளம்பாடியில் கூட்டுக்குடிநீர் திட்டம், ரூ.51 கோடியில் லால்குடி அரசு மருத்துவமனைக்கு 12 அறைகள் கொண்ட புதிய கட்டிடம், ரூ.5 கோடியில் லால்குடி வட்டாட்சியர் அலுவலகம், ரூ.3 கோடியில் கால்நடை மருந்தகங்கள், ரூ.8 கோடியில் லால்குடி அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம், ரூ.4 கோடியில் லால்குடி புள்ளம்பாடி சார்பதிவாளர் புதிய அலுவலகம், தொகுதி முழுவதும் ரூ.7 கோடியில் பல்வேறு பள்ளிகளுக்கு கட்டிடம் என பல்வேறு திட்டங்கள் சயல்படுத்தப்பட்டுள்ளன.

லால்குடி பகுதிக்கு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்த இந்த அரசுக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும். புதிய பேருந்து நிலையத்தை சிறப்பாக, சுத்தமாக, சுகாதாரமாக பராமரிக்க நகராட்சிக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” என்றார்.

## ‘அருவருப்பான கருத்து’ நயினார் நாகேந்திரனுக்கு நடிகை த்ரிஷா கண்டனம்

சென்னை, பிப்.17-

தன் மீதான தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின் கருத்துக்கு, நடிகை த்ரிஷா வழக்கறிஞர் மூலமாக கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.



இதுகுறித்து நடிகை த்ரிஷாவின் வழக்கறிஞர் நித்யேஷ் நடராஜ் வெளியிட்ட அறிக்கையில், ‘எனது கட்சிக்காரரும், திரைப்பட நடிகையுமான த்ரிஷா கிருஷ்ணனின் அறிவுறுத்தலின் பேரில், பின்வருவனவற்றைப் பதிவு செய்ய இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்:

1. எனது கட்சிக்காரரைப் பற்றி ஊடகங்களில் பரவி வரும் அருவருப்பான கருத்து குறித்து இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது.

2. மாநில அரசியலில் உயர் பதவியில் இருக்கும் ஒருவர் இத்தகைய அருவருப்பான மற்றும் பொருத்தமற்ற கருத்தை வெளியிடுவார் என்று எனது கட்சிக்காரர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

3. எனது கட்சிக்காரர் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்திருக்கவில்லை என்பதையும், அவ்வாறு இருக்கவும் விரும்பவில்லை என்பதையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். மேலும், எனது கட்சிக்காரர் கடந்த காலங்களில் இருந்தது போலவே, அரசியலில் எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டையே எடுத்துள்ளார்.

4. எனது கட்சிக்காரர் எந்தவொரு அரசியல் செயல்பாட்டிலும் ஈடுபடாமல், தனது தொழிலில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறார். மிக முக்கியமாக, ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையை ஒருபோதும் பொது விமர்சனம் அல்லது விவாதப் பொருளாக மாற்றக்கூடாது என்பது பொதுவான நிலைப்பாடு. மேலும், உயர் பதவிகளை வகிக்கும் நபர்கள் பொது விவாதத்தில் பொறுப்பையும், சமநிலையையும் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. எனது கட்சிக்காரரின் பெயரை அவருடன் தொடர்பற்ற விஷயங்களில் இணைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது’ என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சில நாட்களுக்கு முன்பு விஜய் த்ரிஷா குறித்து பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியது பெரும் சலசலப்பை உருவாக்கியுள்ளது.

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.960 சரிவு: இன்றைய சந்தை நிலவரம்

சென்னை, பிப்.17-

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலைபவனுக்கு ரூ.960 என விலை குறைந்தது. அதேபோல வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.15,000 சரிந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.



இந்தச் சூழலில், கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கிய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், கடந்த வாரம் இந்திய பங்குச் சந்தை கடும் சரிவை எதிர்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்று (பிப்.16) காலை சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.120 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,340க்கு விற்பனை ஆகிறது. பவுனுக்கு ரூ.960 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,14,720க்கு விற்பனை ஆகிறது.

இதேபோல 24 காரட் சுத்த தங்கம் பவுனுக்கு ரூ.1,048 என குறைந்து, ஒரு பவுன் ரூ.1,25,152க்கு விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.784 என குறைந்து, ஒரு பவுன் ரூ.93,864க்கு விற்பனை ஆகிறது.

வெள்ளி விலை இன்று கிராமுக்கு ரூ.15 குறைந்து, ஒரு கிராம் ரூ.265க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.15,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,65,000க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது. பிளாட்டினம் விலை கிராமுக்கு ரூ.18 என விலை குறைந்து ஒரு கிராம் ரூ.5,988க்கு விற்பனையாகிறது.

## “உங்கள் வாழ்க்கை... உங்கள் கையில்!” மகா சிவராத்திரி விழாவில் சத்குரு பேச்சு

கோவை, பிப்.17-

ஆதியோகி வழங்கியது மனித நல்வாழ்விற்கான தொழில்நுட்பங்கள் என, மகா சிவராத்திரி விழாவில் ஈஷா நிறுவனர் சத்குரு பேசினார். கோவை ஈஷா வளாகத்தில் நேற்று நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவுக்கு தலைமை வகித்து, சத்குரு பேசியதாவது: யோகாவின் முழு முயற்சியும், எனது முயற்சியும், ஆதியோகியின் ஆயிரக்கணக்கான ஆண்டுகால முயற்சியும், மக்கள் யாரும் தங்களுக்குத் தாங்களே ஒரு தடையாக இருக்க கூடிய ஒரு பேரழிவாக மாறிவிடக்கூடாது என்பதே.

இந்த உலகில் நீங்கள் எவ்வளவு அதிகமாகச் செய்கிறீர்களோ, அவ்வளவு தடைகளை சந்திப்பீர்கள்.



ஆனால் மிக முக்கியமான விஷயம், உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் ஒரு தடையாக இருக்கக்கூடாது.

உங்கள் சொந்த மனம், எண்ணம், உணர்ச்சி மற்றும் ஆற்றல்கள் உங்களுக்கே ஒரு தடையாக மாறாமல் இருப்பதை ஒவ்வொரு வரும் உறுதி செய்ய வேண்டும். இதை எளிதாக்குவதுதான் யோகக் கலை.


மனித உடலே ஒரு அதிநவீன வேதியியல் தொழிற்சாலை போன்றது. உங்கள் உடலை நிர்வாகம் செய்யும் ஒரு சிறந்த சி.இ.ஓவாக நீங்கள் இருந்தால், பேரின்பத்தின் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்வீர்கள்.

நீங்கள் ஒரு மோசமான நிர்வாகியாக இருந்தால், கவலை, மன அழுத்தம், முட்டாள்தனம் ஆகிய தேவையில்லாத விஷயங்களை உற்பத்தி செய்வீர்கள். ஆதியோகி வழங்கியது வெறும் நம்பிக்கைகளோ, தத்துவங்களோ, கோட்பாடுகளோ அல்லது போதனைகளோ அல்ல. அவை மனித நல்வாழ்விற்கான தொழில்நுட்பங்கள்.

வரலாற்றில் முதல் முறையாக, சொர்க்கத்தின் மீதான நம்பிக்கையை விட தொழில்நுட்பத்தின் மீதான நமது நம்பிக்கை அதிகரித்துள்ளது. எனவே, ஆதியோகி வருங்கால தலைமுறைக்கு உரியவர். மேல்நோக்கிப் பார்க்காமல், உள்நோக்கிப் பார்ப்பதுதான் ஒரே வழி. இது மதத்திலிருந்து பொறுப்புணர்வை நோக்கிய ஒரு பயணம். மதம் என்பது துரதிர்ஷ்டவசமாக பொறுப்புகள் எங்கோ மேலே இருப்பதாக மக்களை நம்ப வைக்கிறது. ஆனால், நமது கலாச்சாரம் எப்போதும் ‘கர்மா’ பற்றியே பேசுகிறது.

கர்மா என்றால் ‘நமது செயல்’ அல்லது ‘நமது உருவாக்கம்’ என்று பொருள். உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது உங்கள் கையில்தான் உள்ளது. உங்களை எப்படிச் செதுக்கிக் கொள்கிறீர்கள் என்பதே உங்கள் வெற்றி. இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தியவர் ஆதியோகி. இவ்வாறு அவர் பேசினார்.

# புற்றுநோய் சிகிச்சைக்குப் பிறகு 94.5% குழந்தைகள் உயிர்பிழைப்பு: இந்தியாவின் முதல் ஆய்வில் தகவல்




புதுடெல்லி, பிப்.17-

சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, ‘தேசிய குழந்தைகள் புற்றுநோயில் இருந்து உயிர்ப் பிழைத்தவர்கள் திட்டம்’ என்பதன் கீழ் நாட்டின் முதல் ஆராய்ச்சியில் கிடைத்த புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுதொடர்பான ஆய்வுக் கட்டுரை பிரபல மருத்துவ இதழான ‘லான்செட் பிராந்திய சுகாதாரம் தென் கிழக்கு ஆசியா’ இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் முக்கிய ஆசிரியர் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ புற்றுநோயியல் பிரிவின் தலைவர் டாக்டர் ரச்சனா சேத் கூறியதாவது: புற்றுநோய் சிகிச்சைக்குப் பிறகு குழந்தைகளின் நிலை குறித்த ஆவணங்கள் எதுவும் இல்லை.

இதை ஆவணப்படுத்த கடந்த 2016ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரையில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்ற குழந்தைகளின் விவரங்களை சேகரித்தோம். டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு உட்பட 20 புற்றுநோய் சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்ற 5,400 குழந்தைகளைப் பற்றிய தகவல்களை பெற்று ஆய்வு செய்தோம். புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெறும் குழந்தைகளில் கடந்த 5 ஆண்டுகளில் 94.5 சதவீதம் பேர் உயிர் பிழைத்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை எங்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்றவர்களுக்கு மருத்துவ ரீதியாக மற்றும் உளவியல் ரீதியாக பல ஆண்டுகளுக்கு தொடர்ந்து சவால்களை சந்திக்க வேண்டி இருக்கலாம். இதுபோல் சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் பாதிப்புகளை முறைப்படி நாம் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு டாக்டர் ரச்சனா சேத் கூறினார்.

# தொடக்கப் பள்ளி மாணவர்கள் அடைவுத் திறன் ஆய்வு: பிப்.18, 20ம் தேதிகளில் நடைபெறுகிறது



சென்னை, பிப்.17-

தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் அடிப்படைக் கற்றல் திறனை சோதனையிடும் 100 நாள் சவால் நிகழ்வு வரும் 18, 20ம் தேதிகளில் நடைபெறுகிறது.

இது தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை விவரம்: 202425ம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் தமிழ், ஆங்கிலம் வாசிப்பு, கணிதத் திறன், கற்றல் அடைவுகள் குறித்து 100 சவாலை பள்ளிக் கல்வித் துறை அறிவித்தது.

அதன்படி, நடப்பு கல்வியாண்டில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகள் 100 நாட்கள் சவாலுக்கு தயார் நிலையில் உள்ளதாக முன்மொழியப்பட்டுள்ளது. இம்மாதம் 3வது வாரத்தில் 100 நாள்கள் சவால் மதிப்பீட்டு ஆய்வு நடத்தப்பட உள்ளது.

அதன்படி, 1 முதல் 3ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வரும் 18ம் தேதியும், 4, 5ம் வகுப்பு மாணவர்களுக்கு 20ம் தேதியும் தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் அடிப்படைத் திறன்களை மதிப்பீடு செய்ய வேண்டும்.

ஒரு வகுப்புக்கு குறைந்தபட்சம் 5 மாணவர்களிடம் இந்த கற்றல் அடைவுத் திறன் சோதிக்கப்பட வேண்டும். இந்த தகவலை அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், பள்ளி மேலாண்மைக் குழு பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த சோதனை நடத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.



# செங்கல்பட்டு மாவட்ட 6 வனசரகத்தில் உள்ள காப்பு காடுகளில் கணக்கெடுப்பு

செங்கல்பட்டு, பிப்.17-

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 6 வன சரகத்தில் உள்ள காப்பு காடுகளில் நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்றது. இதில், 50க்கும் மேற்பட்ட பலவகை பறவைகள் சுமார் 600 கண்டறியப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்ட வனக்கோட்டத்தில் உள்ள 6 வனச்சரகங்களில் உள்ள காப்பு காடுகளில் நிலவாழ் பறவைகள் அதிகம் நடமாடும், 24 பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதிகளில் நடப்பு ஆண்டிற்கான நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணிகள் நேற்று நடைபெற்றது.

இதில், வனத்துறை அலுவலர்கள், பணியாளர்கள், அரசு சாரா தொண்டு நிறுவன பிரதிநிதிகள், தன்னார்வலர்கள், உயிரியலாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் என 144 பேர் பங்கேற்றனர். பைனாகுலர் மற்றும் அதி நவீன கேமராக்கள் மூலம் பறவைகள் கணக்கெடுக்கப்பட்டது.

இந்தக் கணக்கெடுப்பில், ஏசியன் கிரீன் பி ஈட்டர், இன்டியன் ராபின், இன்டியன் பாரடைஸ் பிளைஈட்டர், இன்டியன் நைட் ஜார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட பலவகை பறவைகள் சுமார் 600 கண்டறியப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டன.

இந்த பறவைகள் கணக்கெடுப்பு குறித்த விபரங்கள் தொகுக்கப்பட்டு, தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். மாநிலம் முழுவதும் நடந்த இந்த நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணி குறித்த விபரங்கள் மொத்தமாக தொகுக்கப்பட்டு,அரசால் விபரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

வனத்துறை பணியாளர் விளக்கம்: சுற்றுச்சூழல் சமநிலையை பேணுதல், பசுமை பரப்பை அதிகரித்தல் உள்ளிட்ட பணிகளுக்கு பறவைகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது குறித்து, நேற்றைய கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்ட தன்னார்வலர்களுக்கு வனத்துறை பணியாளர்கள் மூலம் விளக்கம் அளிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிச. 27, 28ம் தேதிகளில், நீர் நிலை பறவைகள் கணக்கெடுப்பு நடைபெற்றது. இரண்டு விவரங்களும் விரைவில் வெளியிடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# திருப்பூர் மஜ்ஜிதே இக்லஸ் மதரஸாவின் 3ஆம் ஆண்டு விழா கோலாகலம்



திருப்பூர், பிப்.17-

வேலம்பாளையம் பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் மஜ்ஜிதே இக்லஸ் மற்றும் சமூக நல அறக்கட்டளை மதரஸாவின் மூன்றாம் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மார்க்கக் கல்வியின் அவசியம்

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான கல்வி கற்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், இப்பகுதி இஸ்லாமியச் சிறுவர், சிறுமியர்களுக்குச் சிறந்த முறையில் மார்க்கக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் இவ்விழா நடத்தப்படுகிறது.

முதல் மூன்று சிறப்பு பரிசுகளாக தினம்தோறும் வருகை தந்த குழந்தைக்கு. மார்க்க கல்வியில், குர்ஆனை முழுமையாக பயின்று வெற்றி பெற்ற மாணவருக்கு, வாழ்க்கையில் ஒழுக்கம் மிகவும் அவசியம் என்ற கருத்துடன் ஆசிரியரை பேணி வந்த மாணவருக்கு, மூன்று நபர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. மதரஸா குழந்தைகளுக்கு அனைவருக்கும் நற்சான்றிதழ், மெடல் பரிசுகள் வழங்கப்பட்டது.

விழாவை தலைவர் அப்துல் சமத், செயலாளர் ரபீக், பொருளாளர் சித்திக், மற்றும் உறுப்பினர்கள். ஏற்பாடு செய்திருந்தனர். ஹஜரத் முகமது தஸ்லீம் மார்க்க கல்வி பயின்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். முன்னாள் பள்ளிவாசல் தலைவர் முபாரக் அலி அவர்களின் நினைவுகளை போற்றும் விதமாக அவரது மனைவியிடம் நற்சான்றிதழ் வழங்கப்பட்டது.



■ ஈரோடு மாவட்டம் சிக்கைய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, வருவாய்த்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு, விலையில்லா வீட்டு மனை பட்டாவினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, கல்லூரி முதல்வர் உட்பட பலர் உள்ளனர்.




■ மதுரை மாவட்டம், கூட்டுறவுத் துறை சார்பில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் பழங்காநத்தம் கிளையில் தனிநபர் பாதுகாப்பு பெட்டக பிரத்யேக சேவை வசதியினையும் மற்றும் இந்த வங்கியின் 47 வது புதிய கிளையாக செக்காணூரணியில் பொது மக்கள், விவசாயிகள், வணிகர்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் தலைமையில் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து 7 சுயஉதவிக் குழுக்களுக்கு 1.09 கோடி மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கினார்மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களை உள்ளடக்கி 46 கிளைகளுடன் கடந்த 113 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

# “தேர்தல் நெருங்கும் நேரத்தில் டெண்டர்கள், ஏலங்களை அள்ளி வீசும் திமுக அரசு” தினகரன் விமர்சனம்



சென்னை, பிப்.17-

‘சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் டெண்டர்களையும், ஏலங்களையும் அள்ளி வீசும் திமுக அரசு. தேர்தல் செலவுக்காக அரசின் கஜானாவை காலியாக்கத் துடிக்கும் திமுக அரசின் செயல்பாடு கடும் கண்டனத்திற்குரியது’ என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தமிழகத்தில் சாலை, குடிநீர் குழாய் சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறை சார்ந்த பணிகளுக்காக கடந்த 15 தினங்களில் மட்டும் சுமார் 5 ஆயிரம் டெண்டர்களும், ஒரே நேரத்தில் 50க்கும் அதிகமான கல்குவாரிகளுக்கு ஏலமும் அவசரகதியில் அறிவிக்கப்பட்டிருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆட்சிக்கு வந்த ஐந்து ஆண்டுகளில் அரசுத் துறை சார்ந்த பணிகளை மேற்கொள்வதிலும், மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதிலும் மெத்தனப் போக்கையே கடைபிடித்து வந்த திமுக அரசு, சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கால அவகாசம் நெருங்கி வரும் நிலையில், ஒரே நேரத்தில் டெண்டர்களையும், ஏலங்களையும் அள்ளி வீசி அரசு கஜானாவை காலியாக்க முயல்வது கடும் கண்டனத்திற்குரியது.

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு டெண்டர்களையும், ஏல அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கும் திமுக அரசு, சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே அனைத்துவித பணிகளையும் இறுதி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்திருப்பதன் மூலம், தேர்தல் செலவுக்காக நிதி ஆதாரங்களை பெருக்கி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே, ஆட்சிக்காலத்தின் இறுதி நேரத்தில் கிடைத்தவரை லாபம் என அரசின் கஜானாவை முழுமையாக காலியாக்கத் துடிக்கும் திமுகவுக்கு வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், இனி எக்காலத்திற்கும் ஆட்சிக்கு வரவே முடியாத அளவிற்கு தமிழக மக்கள் ஒன்றிணைந்து தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தனிப்படை காவலரை தாக்கியதாக பாஜக, தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட 5 பேர் கைது

சென்னை, பிப்.17-

காவலரை தாக்கியதாக பாஜக, தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட 5 பேரை போலீஸார் கைது செய்தனர். சென்னை நுங்கம்பாக்கம் ஜெகநாதன் சாலையில் உள்ள தனியார் மதுபான பார், நேற்று முன்தினம் இரவு 11 மணியை கடந்தும் செயல்பட்டுக் கொண்டிருந்தது.அப்போது, அங்கு ரோந்துப் பணியில் இருந்த திருவல்லிக்கேணி துணை ஆணையரின் தனிப்படை காவலர் சலீம், மதுபான பாரை உடனடியாக மூடும்படி கூறியுள்ளார். அப்போது, பாரினுள் மது அருந்திக் கொண்டிருந்த 5 நபர்களை வெளியே வரும்படி சலீம் கூறியுள்ளார்.இதனால் ஆத்திரமடைந்த அந்த கும்பல், சலீமுடன் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த அவர்கள் சலீமை தாக்கியதாகக் கூறப்படுகிறது.காயமடைந்த சலீம், இதுகுறித்து நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்த போலீஸார், தாக்குதலில் ஈடுபட்ட 5 பேரையும் கைது செய்தனர்.அவர்கள், குன்றத்தூரை சேர்ந்த பாஜக நிர்வாகி ஜெகநாதன் (51), அனகாபுத்தூரை சேர்ந்த தேமுதிக நிர்வாகி மகாதேவன் (56), மற்றும் தனசேகர் (52), ரவி (50), சரவணன் (50) என்பது தெரியவந்தது. கைதானவர்களிடம் போலீஸார் தொடர்ந்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# ‘அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி சொத்துகளை குவித்தேன்’ அமைச்சரின் முன்னாள் உதவியாளர் வாக்குமூலம்



மதுரை, பிப்.17-

‘அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சொத்துகளைக் குவித்தேன்’ என மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட அமைச்சரின் முன்னாள் உதவியாளர் வாக்குமூலம் அளித்துள்ளதாக காவல்துறை வட்டாரத்தில் கூறப்படுகிறது.

மதுரையில் மோசடி வழக்கில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனின் முன்னாள் உதவியாளர் ஜெய்பாலாஜி, அவரது மனைவி கலாவதி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான பல்வேறு புகார்களை விசாரிக்க இருவரையும் 2 நாள் போலீஸ் காவலில் எடுத்து மதுரை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் விசாரித்தனர்.

அப்போது ஜெய்பாலாஜி போலீஸாரிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது: ரியல் எஸ்டேட் தொழிலில் ஆர்வம் இருந்ததால் 2013ல் மருதம் லேண்ட் புரொமோட்டர் தொடங்கி தொழில் புரிகிறேன். அதைத்தொடர்ந்து சரவணக்குமார், கணேசன், நமச்சிவாயம் ஆகியோருடன் சேர்ந்து மதுரை சின்ன சொக்கிகுளம் பகுதியில் மதுரம் ப்ராபர்ட்டீஸ் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தை தொடங்கினேன்.

பல்வேறு ஊர்களில் கிளைகளைத் தொடங்கினோம். 5 மற்றும் 7 ஆண்டுகள் என்ற அடிப்படையில் தவணை முறையில் பொதுமக்களிடம் முதலீடுகளைப் பெற்று முதிர்வுக் காலத்தில் இடம் கிரயம் செய்து கொடுப்பதாக விளம்பரம் செய்தோம். ரியல் எஸ்டேட் உச்சத்தில் இருந்த நிலையில், முதலீட்டாளர்களுக்கு இடத்தைப் பதிவு செய்து தர மனமின்றி நாங்களே வைத்துக்கொள்ள முடிவெடுத்தோம்.

மருதம், மதுரம் நிறுவனம் மூலம் பணம் செலுத்தியோருக்குப் பணத்தை திருப்பித் தரவில்லை. பணம் செலுத்தியோர் தகராறு செய்தனர். எனது அரசியல் செல்வாக்கை வைத்து மற்றவர்களை சிக்கவைத்து நான் தப்பித்தேன். 2014ல் ஜேஎஸ்வி புரமோட்டர்ஸ் என்ற பெயரில் மதுரை அண்ணா நகரில் அலுவலகம் தொடங்கினேன்.

தோப்பூர் பகுதியில் வீட்டுமனைகளை வாங்கி விற்றேன். அழகுபாண்டி என்பவருடன் சேர்ந்து 10 ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். மேலும், ராம் அருண், ராம் ஆனந்த் ஆகியோருடன் சேர்ந்து தொழில் செய்தேன். ராம் அருணுக்கு அரசியல்வாதிகளிடம் தொடர்பு இருந்ததால் அதைப் பயன்படுத்தினேன்.

முக்கிய அரசியல் பிரமுகர்களிடம் நட்பு வைத்து அதையும் பயன்படுத்திக் கொண்டேன். சில நில உரிமையாளர்களை மிரட்டி மோசடி செய்தேன். கணக்கில்லாமல் வரும் கோடிக்கணக்கான பணத்தை எனது பெயரிலும், மனைவி கலாவதி மற்றும் ராம் அருண், அவரது மனைவி சுவாதி லட்சுமி பெயரிலும் கூட்டாக இடத்தை வாங்கித் தொழில் புரிகிறோம்.

சென்னை நீலாங்கரையிலும் பல ஏக்கர் வாங்கி தொழில் செய்கிறேன். சென்னை பெருங்குடியில் நானும், இலக்குவனும் சேர்ந்து அபார்ட்மென்ட் வீடுகள், ஹோட்டல்களை வாங்கியுள்ளோம். மதுரையில் சீதாராமன் என்பவரிடம் அரசியல் பிரமுகர்களின் பெயரைப் பயன்படுத்தி அவரது வீட்டுமனை திட்டத்தில் 2 மனைகளை வாங்கி ஏமாற்றினேன்.

பல நபர்களிடம் மோசடி செய்து பணத்தை வைத்து கோவையில் நகைக்கடை மற்றும் மதுரை ஆரப்பாளையத்தில் தூரியம் ஸ்டீல்ஸ் நிறுவனத்தை நடத்துகிறேன். அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நிறைய சொத்துகள் குவித்த நிலையில் வெளிமாநிலம் உள்ளிட்ட இடங்களிலும் முதலீடுகள் செய்துளேன். இவ்வாறு அவர் தனது வாக்குமூலத்தில் கூறியிருப்பதாக காவல் துறை வட்டாரத்தில் கூறப்படுகிறது.



# ஈச்சந்தாவில் மகாசிவராத்திரி நான்கு காலம் சிறப்பு பூஜை

தென்காசி, பிப்.17-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் ஈச்சந்தா கிராமத்தில் அருள் பாலித்து வரும் சங்கரலிங்கம் சுவாமி திருக்கோவிலில் மஹா சிவராத்திரி நான்கு கால பூஜைகளும் சிறப்பு அபிஷேகம் பிரசாதங்கள் திருமதி சரஸ்வதி



ஆச்சி குடும்பத்தினரால் சிறப்பு கட்டளை செய்விக்கப்பட்டது. திரளாக பக்த கோடிகள் கலந்து கொண்டு திருவாசகமும் சிவமந்திரமும் பாராயணம் செய்தார்கள் சிவன் சன்னதியில் சிறப்பு அன்னதானம் அன்னதானத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து உணவருந்தி சிவபெருமானின் அருள்பெற்றனர்.




# புளியங்குடியில் ஒன்றிய அரசை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்

புளியங்குடி பிப், 17-

புளியங்குடியில் பட்ஜெட்டில் தமிழ் நாட்டிற்கு குறைந்த அளவு கூட நிதி ஒதுக்காத ஒன்றிய அரசையும் அதற்கு துணை நிற்கும் அடிமை அதிமுக அரசையும் கண்டித்து இந்தியா கூட்டணி அனைத்து கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, டிஎன் புதுக்குடி காமராஜர் சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு தலைமை வகித்தார். உட்பட ஏராளமான நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் வாசு தேவநல்லூர் எம்எல்ஏ சதன் திருமலைகுமார், நகர சேர்மன் விஜயா சவுந்திரபாண்டியன் நகர செயலாளர்கள் அந்தோணிசாமி, நாகூர் கனி உட்பட அனைத்து கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.



■ கொடைக்கானல் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில், கௌரவ விரிவுரையாளர்கள் வாழ்வாதாரம் சார்ந்த அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி, வகுப்பு புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சம வேலைக்கு சம ஊதியமாக 57000 ரூ, 12 மாத ஊதியம், பணி பாதுகாப்பு மருத்துவ விடுப்பு, மகப்பேறு விடுப்பு, ஓய்வு பெற்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கு பணிக்கொடை 2,50,000 ரூபாய், உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிறுத்தி வகுப்பு புறக்கணிப்பு செய்தனர். மேலும் தமிழக அரசு உடனடியாக செவிமடுத்து தங்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றும் படியும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு வழங்கிய சம வேலைக்கு சம ஊதியம் தர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக இலங்கை தமிழர் மறுவாழ்வுத்துறை சார்பில், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் ஆத்தியடி பிள்ளையார் கோவில் இலங்கை தமிழர்கள் குடியிருப்பு பகுதியில் 32 வீடுகள் திறந்து வைக்கும் நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.கலந்து கொண்டார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் உள்ளனர்.

# அம்மா காலத்துத் திட்டங்களை முடக்கிய திமுக அரசு!" மதுரையில் அதிமுகவின் அதிரடி கண்டன ஆர்ப்பாட்டம்!

மதுரை.பிப்.17-

மதுரை மேற்கு தெற்கு ஒன்றியம் அதிமுக சார்பில் குமாரம் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன், தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா, கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



கடந்த அதிமுக ஆட்சியில் மக்களுக்கு அம்மா பல திட்டங்களை வழங்கினார். அந்த திட்டங்கள் அனைத்தும் இந்த திமுக அரசினால் நிறுத்தப்பட்டு விட்டது தாலிக்கு தங்கம் ரூ ஐம்பதாயிரம், இலவச மடிக்கணினி விலை இல்லா சைக்கிள் அம்மா குடிநீர் அம்மா சிமெண்ட் அம்மா உணவகம் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் உள்ளிட்ட அனைத்து நிறுத்தப்பட்டு விட்டன. கடந்த 2021 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற போது பல பொய்களைச் சொல்லி மக்களிடம் வாக்குகளை பெற்ற திமுக அரசு அதனை நிறைவேற்றவே நீட் தேர்வை ரத்து செய்வோம் என்றார்கள் அனைத்து மகளிர்க்குஆயிரம் உரிமைத் தொகை வழங்கப்படும் என்றார்கள் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு அரசு ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகள் மகளிருக்கு பஸ்களில் இலவசம் என்றனர் ஆனால் தமிழகத்தில் பஸ்களின் பற்றாக்குறை தான் தொடர்கிறது கூட்டுறவில் நகை கடன் தள்ளுபடிஉள்ளிட்டவைகள் சொல்லி இதுவரை நிறைவேற்றாத இந்த திராவிட மாடல அரசை வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் புறக்கணித்து அதிமுகவுக்கு வாக்களிக்க தயாராகி விட்டனர் என்று கூறினார். மத்திய அரசு கொண்டு வந்துள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரகவேலையினை 125 நாள் வேலைவழங்க உள்ளதை சீர்குலைக்க நினைக்கும் திமுக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இதில் அதிமுக நிர்வாகிகள் மலர்மன்னன்,ராகுல், மலையாளம், முன்னால் ஒன்றிய கவுன்சிலர்கள் ஜெகதா ராதாகிருஷ்ணன், அம்மு லோகேஸ்வரன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மலையாளம், தகவல் தொழில்நுட்ப அணி தண்டலை ஆனந்த், மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.இதில் மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் மகளிரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை சுப்பிரமணியபுரத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சிக்கு உட்பட்ட ஊர்மெச்சிகுளம் பகுதிகளில் மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் மற்றும் புதிய அங்கன்வாடி மையம் திறப்பு விழா மற்றும் புதிய அங்கன்வாடிக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதில் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ, கலந்து கொண்டு அங்கன்வாடி மையம் மற்றும் புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இதில் ஜெயந்திராஜூ, பரவை பேரூராட்சி தலைவர் கலாமீனாராஜா, முன்னாள் பேரூராட்சி தலைவர் ராஜா, அதிமுக நிர்வாகிகள் எம்.எஸ்.பாண்டியன்,ஜெயபால்,மற்றும் மாவட்ட பேரூர் கழக அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

திருப்பூர், பிப்.17-

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே அவர்கள் தலைமையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 650 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி, தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000